2018 ஜூன் 29]

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கூறிய வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டும். (குறுக்கீடு) ஏனென்றால், ** மாண்புமிகு அமைச்சர் ஒரு பகிரங்கமான குற்றச்சாட்டை சொல்லியிருக்கிறார்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் அவர்களே அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கக் கோருவார்கள். (குறுக்கீடு)*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறிய அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்த வார்த்தைகள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன. (குறுக்கீடுகள்) வினா வரிசை எண் 247, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

247—

கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***20695—திரு. த. மனோ தங்கராஜ்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பத்மநாபபுரம் தொகுதி, திக்கணங்கோட்டில் உள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் சட்டமன்றத் தொகுதி, திக்கணங்கோடு கிராமத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. அரசு விதிகளின்படி, கால்நடை மருந்தகத்தை, கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த வேண்டுமானால், அங்கு தினசரி கால்நடைகளின் வருகை 40-க்குமேல் இருக்க வேண்டும் என அரசு விதிகளில் உள்ளது. அதேபோல, உள் நோயாளி பிரிவு, ஊடுகதிர் இயந்திரம்

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

நிறுவுதல் போன்ற வசதிகளைச் செய்து தருவதற்குப் போதுமான இடவசதி இருத்தல் வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திக்கணங்கோடு கால்நடை மருந்தகத்திற்கு தினசரி கால்நடைகளின் வருகை 40-க்கும் குறைவாக உள்ளதாலும், மருந்தகத்தை விரிவுபடுத்த போதிய இடவசதி இல்லாமையாலும், கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கால்நடைகள் வளர்ப்பதற்கு உகந்த தட்பவெப்ப சூழ்நிலை கொண்ட ஒரு மாவட்டமாகும். ஒரு காலகட்டத்தில் எங்களுடைய மாவட்டத்தில் அதிக அளவில் கால்நடைகள் இருந்தன. தற்போது விவசாய நிலங்களெல்லாம் அதிவேகமாக வீடுகளாகவும், கட்டடங்களாகவும் மாற்றப்பட்டு வருகின்ற காரணத்தினால் மேய்ச்சல் நிலங்கள் குறைந்து, கால்நடைகளின் எண்ணிக்கை இன்றைக்கு குறைவாக இருந்து கொண்டிருக்கிறது. நான் கேட்டிருக்கக்கூடிய திக்கணங்கோடு பகுதியானது 3 பேரூராட்சிகள், 2 ஊராட்சிப் பகுதிகளை உள்ளடக்கிய அதிகமான விவசாயப் பெருங்குடி மக்கள் வாழக்கூடிய பகுதி. எனவே, அந்தப் பகுதியில் தற்போது கால்நடைகளை பராமரிப்பதற்கு போதிய வசதிகள் இல்லாமல் அவற்றின் எண்ணிக்கை குறைந்து, வெளி மாவட்டங்களிலிருந்து பால் கொண்டு வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எங்கள் மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், தற்போது 40-க்கும் மேற்பட்ட கால்நடை உதவியாளர் பணியிடங்கள் காலியாக உள்ளன. என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மூலச்சல், ஆற்றூர், பூவன்கோடு ஆகிய பகுதிகளில் கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் காலியாகவுள்ளன. அதேபோன்று, கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவான Animal Disease Intelligence Unit எங்கள் மாவட்டத்தில் இல்லை. எனவே, சுமார் 100, 120 கி.மீ. தொலைவிலுள்ள திருநெல்வேலிக்குச் சென்றுதான் அந்த ஆய்வுகளை மேற்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தமான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றோம். எனவேதான், இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டு என்னுடைய சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திக்கணங்கோட்டில் உள்ள கால்நடை மருந்தகத்தை கால்நடை

மருத்துவமனையாகத் தரம் உயர்த்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்வீர்களேயானால் நிச்சயமாக கால்நடைகளை இன்னும் நாம் பெருக்க முடியும், பழைய நிலைக்குக் கொண்டு வர முடியும் என்ற எனது கருத்தை நான் இங்கே பதிவு செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திக்கணங்கோடு கால்நடை மருந்தகம் தற்போது பஞ்சாயத்து கட்டடத்தில் குறைந்த இடவசதியுடன் இயங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறைந்தபட்சம் 20 சென்ட் நிலத்தை இலவசமாக துறைக்கு வழங்கும்பட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று அந்த மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்திட ஆவன செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ் அவர்கள்.

திரு. த. மனோ தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அந்தப் பகுதியிலுள்ள மக்களைச் சந்தித்து, நிலம் கிடைக்கச் செய்வதற்கான முயற்சியை மேற்கொள்வேன் என்ற தகவலை கூறிக்கொள்கிறேன். கால்நடை உதவி மருத்துவர்களுக்கு வழங்கப்பட்ட Dynamic Assured Career Progression Scheme அடிப்படைளயில் பதவி உயர்வுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தற்போது இரத்து செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. எனவே, கால்நடை உதவி மருத்துவர்களை ஊக்கப்படுத்தும்விதத்தில், Dynamic Assured Career Progression Scheme அடிப்படையிலான பதவி உயர்வு வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[*2018 ஜூன் 29*

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவு நாகர்கோவிலிலே இல்லையென்று சொன்னார்கள். கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவைப் பொறுத்தவரையில், துறை அதிகாரிகளோடு ஆய்வு செய்து அது தேவைப்படுமாயின் அதற்கு ஏற்பாடு செய்வதற்குண்டான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.*

அதேபோல, கால்நடை உதவியாளர் பணியிடங்கள் அதிக அளவிலே அங்கே காலியாக இருக்கின்றதென்று சொல்லியிருக்கிறார்கள். அதேபோல, கால்நடை மருத்துவர்கள் அங்கே குறைவாக இருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை பிறப்பித்து தமிழகம் முழுவதற்குமான காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கு கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதையும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோல, இன்னொரு கருத்தையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொல்லியிருந்தார். அதையெல்லாம் துறை அதிகாரிகளோடு கலந்து ஆய்வு செய்து, தேவைப்படுமாயின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 248, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. கருணாநிதி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

248—

வட்டாட்சியர் அலுவலகத்துடன் இணைத்தல்

***10447—திரு. இ. கருணாநிதி:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—